

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கழக முத ன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை செய்தார். அருகில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், தொகுதிப் பார்வையாளர் உத்திராபதி, செல்வம், விராலிமலை சந்திரசேகர் எம்.எல்.ஏ.க்கள் சௌந்தரபாண்டியன் பழனியாண்டி உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயில் அரசு மருத்துவமனையில் ரூ.3.50 கோடி மதிப்பில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்குஉயர்கல்வி துறை அமைச்சர் கோவி செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், தகவல் தொழில்நுட்ப பணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்ஸாண்டர், வைத்தீஸ்வரன் கோயில் பேரூர் செயலாளர் எம். அன்பு செழியன், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி தலைவர் பூங்கொடிஅலெக்சாண்டர், மாவட்ட அறங்காவலர்கள் குழு தலைவரும் பொதுக்குழு உறுப்பினருமான எஸ்.சுவாமிநாதன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

# ‘உலகெங்கும் கலைஞர்’ நூல்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மே 24–**

**சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் “உலகெங்கும் கலைஞர்” எனும் ஆய்வு நூலினை நேற்று முன்தினம் (22.05.2025) காலை 10 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமானமு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.**

திராவிட கழகத் தலைவர், கி. வீரமணி முதல் நூலைப் பெற்றுக் கொண்டார். இந்த நூலினை சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் சட்டக்கதிர் ஆசிரியர் வி.ஆர்.எஸ்.சம்பத் தொகுத்துப்பதிப்பித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை தாங்கினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி மற்றும் திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க.வின் சட்டப் பிரிவு தலைவர் ஆர்.விடுதலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வி.ஆர்.எஸ். சம்பத் அமெரிக்காவில் உள்ள ‘கென்சா’ பல்கலைக்கழகத்தில் ‘கலைஞர் பெயரில் இருக்கை’ தொடங்குவதற்கு அனுமதி பெற்றிருப்பதாகவும், அதற்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மேலும் கலைஞர் பெயரில் பன்னாட்டு நிலையில் விருது ஒன்றினை தோற்றுவிப்பதற்கான திட்டத்தினையும் முதல்வரிடம் அளித்தார்.

முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டை முன்னிட்டு அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் உள்ள கென்சா மாநில பல்கலைக்கழகத்தில் டாக்டர் கலைஞர் சமூக நீதி இருக்கை உருவாக்குவதற்கான அனுமதி பெற்று மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவரும் சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் செய்துள்ளார்.

இதற்கான வைப்புத் தொகை மில்லியன் அமெரிக்க டாலர் மற்றும் திட்ட அமலாக்கத்துறை நிதியாக 0.5 மில்லியன் டாலர் தேவைப்படுகிறது.

முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் சமூக நீதியை நிலை நாட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார். பல செயல்பணிகளை செய்துள்ளார். தமிழ்நாடு மக்கள் அனைவருக்குமான சமூக நீதி பணிக் குறித்து பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். அவரது நினைவை போற்றும் வகையிலும் அவரது செயல்களை ஆராயும் வகையிலும் சமூக நீதி திட்டங்கள் குறித்து மேலும் ஆய்வுகளை நடத்திடவும் உலகம் முழுவதும் நிறைவேற்ற பல்வேறு வெளியீடுகள் கொண்டு வரவும், அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் அமைந்துள்ள கென்சா மாநில பல்கலைக் கழகத்தில் கலைஞர் மு.கருணாநிதி சமூக நீதி இருக்கை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னை வளர்ச்சிக் கழகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

அதற்கான நிதி உதவியை தமிழ்நாடு அரசின் சார்பில் 1.5 மில்லியன் அமெரிக்கா டாலர் வழங்கிட முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

### உத்தமசோழபுரம் கிராமத்தில்

# வெட்டாற்றின் குறுக்கே புதிய கடைமடை இயக்கு அணை அமைக்கும் பணி!

## நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் விளக்கம்!

*நாகை, மே 24-*

*நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் உத்தமசோழபுரம் கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே புதிய கடைமடை இயக்கு அணை (பெட்டேம்) அமைக்கும் பணி குறித்து நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப ஆகாஷ் கூறியிருப்பதாவது.*

*திருமருகல் ஊராட்சி ஒன்றியம் உத்தமசோழபுரம் கிராமத்தில் 2024-2025 ஆம் நிதியாண்டில் வெட்டாற்றின் குறுக்கே புதிய கடைமடை இயக்குஅணை ரூ.49.50 கோடி மதிப்பீட்டில் அமைக்க அரசாணை 2நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.*

*21.02.2025 அன்று மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் மற்றும் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் த.வி.பி.நாகை மாலி ஆகியோர்களால் புதிய கடைமடை இயக்குஅணை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டியபோதே கீழ்புறம் உள்ள விவசாயிகள் தடுப்பணையை கீழ்புறம் தள்ளி கட்டப்பட வேண்டும் என்றும் பணியை இவ்விடத்தில் மேற்கொள்ள கூடாது என்றும் பணி மேற்கொள்ள விடாமல் தடுத்தனர்.*

*இதனைத்தொடர்ந்து 25.02.2025 அன்று வட்டாட்சியர், நாகப்பட்டினம் அவர்களின் தலைமையில் தடுப்பணைக்கு கீழ்புறம் உள்ள விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் எவ்வித உடன்பாடுகளும் ஏற்படவில்லை.*

*28.02.2025 அன்று தடுப்பணைக்கு கீழ்புறம் உள்ள விவசாயிகளால் பணி நடைபெறும் தளத்தில் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.*

*04.03.2025 அன்று வருவாய் கோட்டாட்சியர், நாகப்பட்டினம் அவர்களின் தலைமையில் சமாதான பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்திலும் எவ்வித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை.*

*இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் நீர்வளத்துறை தொழில்நுட்ப வல்லுநர் குழுவை வரவழைத்து விவசாயிகளால் கூறப்படும் மாற்று இடங்களை ஆய்வு செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்.*

*அதனைத்தொடர்ந்து நீர்வளத்துறை தொழில்நுட்ப வல்லுநர் குழு 26.03.2025 அன்று விவசாயிகளின் கோரிக்கை விவரங்களை கேட்டு பின் தளத்தினை நேரில் ஆய்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து மேற்காணும் மாற்று இடங்களில் கடை மடை இயக்கு அணை அமைப்பது தொடர்பாக ஆரம்ப கட்ட ஆய்வு குறித்து விளக்கினார்கள்.*

*மாவட்ட ஆட்சியர் மாற்று இடங்களில் மண் பரிசோதனை செய்து அறிக்கையினை சமர்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.*

*30.03.2025 மற்றும் 31.03. 2025 ஆகிய தேதிகளில் திருச்சியிலிருந்து குழு வரவழைக்கப்பட்டு மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மண் பரிசோதனை அறிக்கை 03.04.2025 அன்று பெறப்பட்டது.*

*நீர்வளத்துறை தொழில்நுட்ப வல்லுநர் குழு களஆய்வு மற்றும் மண் பரிசோதனை அறிக்கையினை ஆராய்ந்து மாற்று இடங்களில் கடை மடை இயக்கு அணை அமைப்பது தொடர்பாக அவர்களது ஆய்வறிக்கை 09.04.2025 அன்று சமர்பிக்கப்பட்டது. ஆய்வு அறிக்கையில் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட இடங்களில் மண்ணீன் உறுதித்தன்னமை மிகவும் குறைவாக உள்ளதாகவும் மற்றும் வளைவு பகுதியாக உள்ளதாலும் கடை மடை இயக்கு அணை கட்டுவதற்கு தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் ஏற்கனவே அரசாணையில் தெரிவிக்கப்பட இடத்தில் கடைமடை இயக்கு அணை அமைப்பதற்கு தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*19.04.2025 அன்று வருவாய் கோட்டாட்சியர் தலைமையில், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் விவசாயிகளுடன் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.*

*அப்பகுதியில் உள்ள விவசாய பெருமக்களின் கோரிக்கைகளை ஏற்று பெருங்கடமனூர் வாய்கால் மற்றும் வளப்பார் வாய்கால்களில் ஆய்வு செய்தபின் வாய்க்கால்களின் குறுக்கே கதவணை அமைத்து கொடுக்கப்படும்.*

*இதனைத்தொடர்ந்து 19.05.2025 அன்று பணி மீண்டும் துவங்கி நடைபெற்று வருகிறது.*

*இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### பெரம்பலூர் மாவட்ட

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - – தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் பங்கேற்பு!

*பெரம்பலூர்,மே 24-*

*பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில், மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது.*

*இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.*

*இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,*

*ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளரகள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர், மாவட்ட மகளிர் அணி மாவட்ட தலைவர் பாத்திமா செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் தனலட்சுமி,*

*மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் அங்கயற்கண்ணி, விஜி புளொரா ரெஜி, புஷ்பராணி, செல்வராணி, வலை தள பொறுப்பாளர்கள் ஜெயப்பிரியா, முருகேஸ்வரி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை தலைவர் சாந்தி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் சுதா,நட்சத்திரம், பரமேஸ்வரி,*

*சுமதி, வலை தள பொறுப்பாளர்கள் சங்கீதா,கண்ணகி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*பொருள் :*

*1.ஜூன்3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் மகளிர் அணி சார்பில் சிறப்பாக கொண்டாடுவது எனவும்*

*2. 2026 சட்டமன்ற தேர்தலில் தலைமை கழகம் அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

### உச்சநீதிமன்ற ஆணைப்படி – தமிழ்நாட்டிற்கு

# 40.43 டி.எம்.சி. தண்ணீர் வழங்கிட வேண்டும்!

## காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!

*புதுடெல்லி, மே 24-*

*22.05.2025 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 40வது கூட்டத்தில், தமிழ் நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீ.வ.து. தற்பொழுது (22.05.2025) மேட்டூர் அணையின் நீர்மட்டம் 110.74 அடியாகவும், நீர் இருப்பு 79.508 டி.எம்.சியாக உள்ளது என்றும் வரும் ஆண்டில் (2025-2026) தென்மேற்கு பருவ மழை, 2025, மே மாதம் 27ம் நாள் துவங்கும் எனவும், இப்பருவமழை இயல்பைவிட சற்று அதிகமாக இருக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளதாலும், வரும் ஆண்டில் தமிழகத்திற்கு ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் வழங்கப்பட வேண்டிய நீர் அளவான முறையே 9.19 டி.எம்.சி மற்றும் 31.24 டி.எம்.சி. நீரினை உச்சநீதி மன்ற ஆணையின்படி கர்நாடக மாநிலம் பில்லி குண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தை தமிழ்நாடு அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.*


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை**

பூ.து.ந.க.எண்.பி2 / 0826 / 2025

**இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 14 வார்டு 190ல் உள்ள தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள சாலையோர பூங்காக்கள் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் மண்டலம் –8, 11 & 14 வார்டு 96, 97, 103, 151, 181, 182, 183, 186, 187, 190, 191 ல் உள்ள 26 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பழுதுபார்க்கும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் (சிப்பம் 21 to 24)**

**பணியின் மதிப்பு ரூ.33.82 முதல் ரூ.166.07 இலட்சங்கள் வரை**

முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **09.06.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **10.06.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2510 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**





மாவீரர், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் 1350 வது பிறந்தநாளையொட்டி, கரூர் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி, மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் முன்பு, திருவுருவப் படத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், மகேஸ்வரி சுப்பிரமணி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், பகுதி கழகச் செயலாளர்கள் சுப்பிரமணி, ஆர்.எஸ்.ராஜா, வி ஜி எஸ் குமார், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.



கரூர் மாநகராட்சி வார்டு எண் 42, யூனியன் ஆபீஸ் ரோடு, கணபதிபாளையம் பகுதியில் 2 இடங்களில் மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளையும் ஒரு இடத்தில மழைநீர் வடிகால் வசதிக்கான பணிகளையும் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல்.எம்.எல்.ஏ., க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மாநகராட்சி ஆணையர் சுதா, மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், கோல்ட் ஸ்பாட் ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.